# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

## அசல் வழக்கு எண். 428/2010

நாள்: 08.07.2026.

பெயர்: ராஜசேகர் (பி.வா.சா.1) த/பெ: ராமசந்திரன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...</u>

1) எனது பிறந்த தேதி என்ன என்றால் 24.02.1978 ஆகும். நான் 1997 ஆம் ஆண்டு தான் மேஜர் ஆனேன் என்றால் சரிதான். 14.04.1992 ல் ஒப்பந்தம் ஏற்பட்ட தேதியில் நான் மைனர் என்றால் சரிதான். 20 ஆண்டுகளுக்கு முன்னர் சொத்தை அளந்து கொடுத்ததாக நான் கூறியுள்ளதில் எந்த தேதியில் அளந்து கொடுத்தார்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை. எந்த ஆவணத்தின் அடிப்படையில் அளக்கப்பட்டது என்றால் நத்தம் பட்டாவின் அடிப்படையில் பரப்பளவையும், நான்கெல்லையும் வைத்து தான் அளந்தோம். எனக்கு பாத்தியப்பட்டதாக கூறும் சொத்திற்கு தனிப்பட்டா, தனிப்புலப்படம் ஏற்பட்டுவிட்டதா என்றால் இல்லை, நத்தம் கூட்டுப்பட்டாவாக தான் உள்ளது, தனிப்புலப்படமும் ஏற்படவில்லை. நான் கூறும் அனுபவப்படி எனக்கு தனிப்பட்டாவோ, தனிப்புலப்படமோ இல்லை என்றால் சரிதான். நான் நான்கெல்லைப்படி அளந்ததாக கூறுவதும், தாவா சொத்தின் அனுபவத்தில் இருப்பதாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 23.11.2009 தேதியிட்ட கிரைய ஆவணம் எனது தந்தை ராமசந்திரன் நாகமுத்து என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) வா.சா.ஆ–3 சொத்து சர்வே எண்.81/54 ல் கட்டுப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ–3 ல் கண்ட 2 செண்ட் சொத்திற்கும், மேல்புறம் குணசேகரன் என்பவரிடமிருந்து 23.11.2009 ல் நாகமுத்து என்பவர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தில் எனது தந்தைக்கும், சித்தப்பாவிற்கும் பாகமான 1 ¼ செண்டிற்கு பதிலாக கீழ்புறமுள்ள 81/54 ல் 2 செண்ட் சொத்தை பாக ஒப்பந்தம் படி விட்டுக்கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ–3 ல் உள்ள

எனது தந்தை 1ம் பிரதிவாதியின் கையெழுத்தும், வாதி தாக்கல் செய்துள்ள 14.04.1992 தேதியிட்ட பதிவு செய்யப்படாத பாக ஒப்பந்தத்தில் உள்ள கையெழுத்தும் ஒன்று தானா என்றால் இல்லை, ஆனால் வா.சா.ஆ.3 யும், மேற்கண்ட பாக ஒப்பந்தத்தில் உள்ள கையெழுத்தையும் ஒப்பீடு செய்து பார்க்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். 14.04.1992 தேதிய பாக ஒப்பந்தத்தில் கையெழுத்து போடவில்லை என்று எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது தந்தை என்னிடம் கூறியுள்ளார். தாவா சொத்து எனக்கு பாத்தியம் என்பதை காட்டுவதற்கு தனிப்பட்ட ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை நான் அனுபவிக்கவில்லை என்றாலும், அனுபவிப்பதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/ரா.ராஜசேகர்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.